# தேவனுடைய உண்மையான மிகச்சிறந்த சித்தம்

## 3.8 கர்த்தராகிய இயேசுவை அறிவித்தல்




**வேத வசனம்:** **ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.**
*மத்தேயு 24:14*

**அறிக்கை:** **அநேகர் விசுவாசித்து இரட்சிக்கப்படும்படிக்கு நாம் இயேசுவின் நாமத்தைப் பறைசாற்ற வேண்டும்.**

**சத்தியம்:** தேவன் எல்லா மக்களையும் இரட்சிக்கத் தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாகத் தீர்க்கப்படுவது இல்லை. ஆனால் அவரை விசுவாசிக்காதவர்கள் ஆக்கினைத்தீர்ப் புக்குட்பட்டாயிற்று. அதனால் நாம் கர்த்தராகிய இயேசுவைப் பறைசாற்றி அவரை விசுவாசித்து இரட்சிக்கப்படும்படி அநேகரை அழைக்கவேண்டும்.



### வேதப் பகுதி: மத்தேயு 28:16-20

**பாடம்**

**1. இயேசுவின் இறுதி வார்த்தைகள்:** உலகத்தைவிட்டுச் செல்லுவதற்கு முன் கர்த்தர் இயேசு சீஷர்களிடம் கூறிய கடைசி வார்த்தைகள் என்ன என்று உனக்குத் தெரியுமா? மத்தேயு 28:18-20 வரை அவை எழுதப்பட்டுள்ளது. இயேசு அவர்களிடம் வந்து சொன்னது, “வசனம்”. மரித்துக்கொண்டிருப்பவர்கள் கடைசி தருணங்களில் முக்கியமற்றவைகளைப் பேசமாட்டார்கள். ஆகையால் நாம் புரிந்துகொள்ளுவது உலகம் முழுவதும் சுவிசேஷத்தை அறிவிப்பது தேவனால் நமக்குக்கொடுக்கப்பட்ட மிக முக்கியமான பணி. சுவிசேஷம் அல்லது நற்செய்தி என்பது “வசனம்”. எவனொருவன், இயேசு கிறிஸ்துவை கர்த்தர் என்று அறிக்கை செய்து, தேவன் அவரை மரணத்தினின்று உயிர்ப்பித்தார் என்பதை தன்னுடைய இருதயத்தில் விசுவாசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான். (அப். 2:21, ரோமர் 10:9)

**2. சுவிசேஷத்தை எல்லா இடங்களிலும் பரப்புங்கள்:** தேவனுடைய வார்த்தையின்படி, “வசனம்”. இயேசு கிறிஸ்துவுக்கு கூடியிருந்த ஜனக்கூட்டத்தைப் பார்த்தவுடன் அவர்கள் ஒடுக்கப்பட்டவர்களாகவும் உதவியற்றவர்களாகவும் இருந்தபடியால் அவர்கள் மேல் மனதுருகினார். அவர்கள் மேய்ப்பனற்ற ஆடுகள் போல அவருடைய கண்களுக்குத் தெரிந்தார்கள். அவர் பல பட்டணங்கள் மற்றும் கிராமங்களில் நடந்து திரிந்து தேவ ராஜ்யத்தைக்குறித்த செய்திகளை உபதேசிக்கவும் கற்றுக்கொடுக்கவும் செய்து, மக்களைத் தேவனிடத்தில் மனந்திரும்பச் செய்தார். (லூக்கா 9:35-36)

**3. மனிதர் இரட்சகரை அறியச் செய்யுங்கள்:** வேதாகமம் குறிப்பிடுகிறது, “வசனம்”. இதற்காகத்தான் அனைத்து மக்களும் கர்த்தரை அறிந்துகொள்ள வேண்டும். மீனவனின் வேலை அநேக மீன்களைக் கரைக்குக் கொண்டுவர வேண்டும். அதுபோல தேவ மக்களின் பணி உலக மக்களைத் தேவனிடம் திரும்ப கொண்டுவர வேண்டும். (யோவான் 3:16,18)

**4. சிலுவையின் செய்தி:** நற்செய்தி என்று நாம் குறிப்பிடும் எல்லா மனிதரும் மீட்கப்படும்படியான இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதல் பற்றிய செய்திக்கு இரட்சிக்கும்படியான வல்லமை உண்டு என்று வேதம் குறிப்பிடுகிறது. ஆகையால் தான் இந்தச் செய்தியை நம்முடைய சொந்தக் குடும்பத்தினருக்கு, நம்முடைய நண்பர்களுக்கு மற்றும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு நாம் அறிவிக்கவேண்டும். (1 கொரிந்தியர் 1:18)

**முடிவுரை:** எல்லா ஜனங்களும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதபுத்தகம் குறிப்பிடுகிறது. சுவிசேஷம் எல்லா இடங்களுக்கும் செல்ல வேண்டும். பின்பு தான் முடிவு வரும். ஆகையால் நாம் அநேகருக்குக் கர்த்தருடைய பெயரையும் சுவிசேஷத்தையும் அறிவிப்போம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.